Journal of Valartamil, eISSN 2716-5507,
Volume 1, No.2, 2020, (84-98).

# மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் 2000-2009 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சிறுகதைகளில் காணப்படும் கருப்பொருள்கள்: ஒரு பார்வை

# Themes highlighted in Malaysia and Singapore short stories from year 2000 to 2009: A Review

**Veeramohan Veeraputhran**
Department of Foreign Languages
Faculty of Modern Languages and Communication
University of Putra Malaysia, Serdang
veeramohan@upm.edu.my

**Manimangai Mani**
Department of English Language
Faculty of Modern Languages and Communication
University of Putra Malaysia, Serdang
manimangai@upm.edu.my

Received: 25 November 2020; Accepted: 08 December 2020; Published: 08 December 2020

**To cite this article (APA):** Veeramohan, V., & Manimangai, M. (2020). மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் 2000-2009 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சிறுகதைகளில் காணப்படும் கருப்பொருள்கள்: ஒரு பார்வை. *Journal of Valartamil*, *1*(2), 84-98. https://doi.org/10.37134/jvt.vol1.2.8.2020

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol1.2.8.2020

***ஆய்வுச் சாரம்***: சமூக அவலங்களை எடுத்துரைக்கும் ஓர் ஊடகமாகச் சிறுகதை விளங்குகிறது. 2000 - 2009ஆம் ஆண்டுகளில் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் வெளிவந்த சிறுகதைகளில் காணப்படும் கருப்பொருள்கள் ஒரு பார்வை எனும் இக்கட்டுரை இரு நாடுகளில் உள்ள சிறுகதை எழுத்தாளர்கள் இயற்றிய சிறுகதைகளில் காணப்படும் கருப்பொருள்கள் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூர், மலேசிய எழுத்தாளர்களை அடையாளம் காட்டுவதோடு அவர்கள் பயன்படுத்திய கருப்பொருள்களை வெளிக்கொணரவும் இக்கட்டுரை வழிவகுக்கிறது. மேலும், இரு நாட்டு எழுத்தாளர்களின் ஆளுமைகளைக் கண்டு இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க இக்கட்டுரை துணை புரியும். 2000 முதல் 2009 வரை குறிப்பாக இந்த பத்து ஆண்டுகளில் வெளிவந்த சிங்கப்பூர் மலேசிய தமிழ்ச் சிறுகதைகள் பகுப்பாய்வு அணுகுமுறையில் ஆராய்ந்து இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவரை பயன்படுத்தாத கருப்பொருள்களை அடையாளம் கண்டு அதனைச் சிறுகதை இலக்கியமாக உருவாக்க இளம் எழுத்தாளர்கள் முனைப்பு காட்ட வேண்டும் என்பதே இக்கட்டுரையின் இன்னொரு நோக்கமாகும். இருநாட்டு எழுத்தாளர்களின் படைப்புகளில் காணப்படும் ஆளுமைகள் இதற்கு நல்லதொரு சான்றாகும்.

***கருச்சொற்கள்*:** *சிறுகதைகள், கருப்பொருள்கள், மலேசியா, சிங்கப்பூர், எழுத்தாளர்கள்*

***Abstract***: Short stories are used as a medium to reflect on social anxieties that takes place in the community. This article titled 'Themes highlighted in Malaysia and Singapore short stories from the year 2000 - 2009: A Review' aims to clearly explained on the themes used in the short stories written by the authors from both countries. This article

aims to highlights on the themes used by the Malaysia and Singapore authors and lead as an initiative to encourage the upcoming young authors. Therefore, this study aims to look into the short stories produced within these ten years of the time frame which is from the year 2000 till 2009. Other objective of this article is to create an opportunity for the upcoming young authors to identify the themes that have not be underlined previously in the short stories as an initiative to be taken. This will be a testament to the visible personalities in the work of the authors from the two countries.

**Keywords:** short stories, themes,Malaysia,Singapore,writers

## முன்னுரை

ஓர் இலக்கியம் அல்லது படைப்பு மக்களிடையே ஒரு பெரிய வரவேற்பைப் பெறுவதற்குப் பல காரணங்கள் உண்டு. "ஒரு படைப்பின் உயிர்நாடியான கரு தேர்வே அப்படைப்பு வெற்றியடைய பெரும் காரணமாகிறது" (சபாபதி,1995,p.51). தெரிவு செய்யப்படும் கரு அப்படைப்புக்கு ஓர் அழுத்தத்தையும் இலக்கியத் தரத்தையும் கொடுக்கின்றது. இதனால், படைப்பிலக்கியம் தனிச்சிறப்புப் பெறுகின்றது ; மக்கள் மத்தியிலும் பேசப்படுகின்றது.

"சிறுகதை வடிவத்தில் முதன்மை இடத்தைப் பெறும் கூறு கருவாகும். எந்த ஒரு நிகழ்ச்சியின் மேல் அல்லது கருத்து விளிம்பின் மேல் சிறுகதைப் பின்னப்பட்டுள்ளதோ, அந்த நிகழ்ச்சி அல்லது கருத்து சிறுகதையின் 'கரு' எனப்படும். கதைப்பொருள் என்ற விரிந்த நிலையிலிருந்து சிறப்பு நிலையில் வெளிப்படுவதுதான் கரு. கரு என்பது என்ன பொருளை (விடயம் அல்லது பிரச்சினையை) எழுத்தாளர் எடுத்து எழுதுகிறார் என்பதாகும்". (வேலுச்சாமி,1999,p.133).

சிறுகதையில் மற்ற கூறுகளைவிட கதைக்கருவே மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. கதைக்கருவை மையமாகக் கொண்டு கதை பின்னப்படுகின்றது. கதையின் மைய அம்சமான அதன் கருவே கதையின் உருவத்தையும் நடையையும் நிர்ணயிக்கக் கூடியதாகும் எனவே கதையின் சிறப்புக்கு மூலக்காரணமாக இருப்பது அதன் கருதான் கருவே கதையின் மையக் கருத்தாகவும் நோக்கமாகவும் அமைகின்றது.

'கதைகரு குடும்பம் பாசத்திலிருந்து உலகப் பொருளாதாரப் பிரச்சினைகள் வரை இருக்கலாம்' (வேலுச்சாமி,1999p,.51) மனித வாழ்க்கையின் அனுபவங்கள் பெரும்பாலும் சிறுகதையின் கதைக்கருவாக அமைகின்றன. சிறுகதையின் கரு இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற வரையறை ஏதுமில்லை ஏனென்றால் கரு எந்த இடத்திலும் நேரத்திலும் தோன்றக்கூடியதாகும் 'கதையில் எத்தகைய ஆக்கப் பொருட்கூறு பயன்படுத்த வேண்டும் என்பதையும் எச்செயல் அல்லது நிகழ்ச்சிகளை விவரிக்க வேண்டும் என்பதையும் எந்தக் கருத்தை வழங்க வேண்டும் என்பதையும் எந்தக் குறிப்பிட்ட நேரத்தில் கதையின்கண் கருத்தை ஈர்க்க வேண்டும் என்பதையும் முடிவு செய்வதற்குக் கருவே ஆசிரியரை நெறிப்படுத்துகிறது (ஞானமூர்த்தி, 1998,p.335).

மலேசிய, சிங்கப்பூர் எழுத்தாளர்கள் பல்வேறு கருப்பொருள்களைக் கொண்டு கதைகளைப் படைத்துள்ளனர். மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் சீன, மலாய், தமிழ் இன வாழ்வியலைப் பிரதிபலிக்கும்

வகையில் பல்வேறு கருக்கள் அமைந்துள்ளன. வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் எதிர்கொள்கின்ற பிரச்சனைகள் இயல்பாக இவ்விரு நாட்டு எழுத்தாளர்களின் சிறுகதைகளில் பேசப்பட்டுள்ளன. (கோவிந்தசாமி,1992,p.62)

மலேசியாவைப் பொறுத்தவரை தொடக்கக்காலத்தில் காதல், போர், அன்றைய தோட்டப்புற மக்களின் வாழ்க்கைநிலை முதலான கதைப்பொருள்கள் சிறுகதை இலக்கியத்திற்குக் கருப்பொருள்களாக அமைந்தன. பின்னர், நாடு சற்றே வளர்ச்சி கண்ட பிறகு குடியுரிமைப் பிரச்சனை, கல்வி, இனப் பிரச்சனை முதலானவை கருப்பொருள்களாக அமைந்தன. ஆனால், இன்றைய நாளில் சிறுகதைப் படைப்பாளர்கள் சமூகச் சீர்கேடு, பண்பாட்டுப் பிரச்சனை, கல்வி, போதைப்பொருள், சாதி, முதியோர் பிரச்சனை, புறநகர்ப் பகுதிகளில் இந்தியர்களின் வாழ்க்கைநிலை முதலியவற்றைத் தங்களின் சிறுகதைகளில் படைத்து வருகின்றனர்.

சிங்கப்பூரைப் பொறுத்த வரையில் தொடக்கக்காலத்தில் இரண்டாம் உலகப்போர். கம்யூனிஸ்ட்டு கொடுமைகள், பல்லின ஒற்றுமை, நாட்டுப்பற்று முதலிய கருப்பொருள்களில் அதிகச் சிறுகதைகள் படைக்கப்பட்டன. (சிவகுமாரன்,2001,p.19) இன்றைய நாளில் அதிகமான சிறுகதைகள் மனிதநேயம், இளையோர் பிரச்சனை, பொருளாதாரச் சிந்தனை முதலானவற்றைக் கருப்பொருளாகக் பொருளாகக் கொண்டு படைக்கப்படுகின்றன. பல்வேறு கருக்களில் சிறுகதைகள் அமைந்தாலும் இருநாட்டிலும் சமூகச் சிக்கல்களை முன்வைத்துப் பல கதைகள் படைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வின் நோக்கம்**

சிங்கப்பூர், மலேசியா ஆகிய இருநாடுகளுக்கும் வெவ்வேறு சூழல்கள் இருப்பதால் அவற்றின் பின்னணிக்கு ஏற்பப் படைப்பாளர்கள் தம் படைப்புகளைப் படைத்திருக்கின்றனர். எனவே, அவற்றிற்கு இடையிலான ஒற்றுமை வேற்றுமையை வகைப்படுத்திப் படைப்பாளர்களின் தனித்தன்மைகளை வெளிக் கொணர்வதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வு அணுகுமுறை**

தமிழ்ச் சிறுகதைகளை ஆராயும்போது விளக்கவியல் அணுகுமுறையைக் காட்டிலும் பகுப்பாய்வு அணுகுமுறையே (*Analytical Approach*) பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இருநாடுகளின் சிறுகதைகளுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை நிரல்படுத்துவதற்கு ஒப்பீட்டு அணுகுமுறை (*Comparative Approach*) பயன்படுத்தப்பட்டுள்ளது. எண்ணிக்கையில் மிகுதியாக இருக்கும் சிறுகதைகளை ஒப்பிடுவதற்குத் துணைபுரியும் வகையில் உள்ளடக்கப் பகுப்பாய்வுமுறை ( *Content Analysis* ) பயன்படுத்தப்பட்டுள்ளது.

***மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் 2000-2009 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சிறுகதைகளில் காணப்படும் கருப்பொருள்கள்: ஒரு பார்வை***

இக்கட்டுரையில், குடும்பம், சமூகம், தனிமனிதப் போராட்டம், மனிதநேயம், காதல், பெண்ணியம், கல்வி மற்றும் பிற என்னும் உள்தலைப்புகளின் அடிப்படையில் கருப்பொருள்கள் ஆராயப்பட்டுள்ளன.

**அ. குடும்பம்**

'நல்லதோர் குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்பது சான்றோர் வாக்கு. நல்லதொரு குடும்பமே ஒரு சிறந்த சமுதாயம் மலர அடித்தளமாகிறது.

குடும்பம் சமுதாயத்தின் ஒரு முக்கிய அங்கமாகவே கருதப்படுகிறது. அதனாலேயே மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்கள் குடும்பம் என்னும் கருப்பொருளில் அதிகக் கதைகள் இயற்றியுள்ளனர். இந்த பத்து ஆண்டுகளில் மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் குடும்பம் என்னும் கருப்பொருளில், பெற்றோர் பிள்ளைகள் உறவு, கணவன் மனைவி உறவு, மாமியார் மருமகள் உறவு, சகோதரத்துவம் ஆகிய கூறுகளில் சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1:** மலேசியாவில் கருப்பொருள் விழுக்காட்டு அடிப்படையில் அமைக்கப்பட்ட வரைபடம்.

| கருப் பொருள் (சிறுகதை) | குடும்பம் | கல்வி | மனிதநேயம் | காதல் | பெண்ணியம் | சமூகம் | தனி மனிதப் போராட்டங்கள் | பிற |
|---|---|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 369 | 49 | 113 | 69 | 83 | 321 | 191 | 64 |
| விழுக்காடு | 29% | 4% | 9% | 5.5% | 6.5% | 26% | 15% | 5% |




**அட்டவணை 2 :** சிங்கப்பூரில் கருப்பொருள் விழுக்காட்டு அடிப்படையில் அமைக்கப்பட்ட வரைபடம்.

| கருப் பொருள் (சிறுகதை) | குடும்பம் | கல்வி | மனிதநேயம் | காதல் | பெண்ணியம் | சமூகம் | தனி மனிதப் போராட்டங்கள் | பிற |
|---|---|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 219 | 7 | 26 | 43 | 25 | 121 | 80 | 13 |
| விழுக்காடு | 41% | 1% | 4.9% | 8% | 4.7% | 23% | 15% | 2.4% |




**மலேசிய சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் குடும்பம்**

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டக் காலத்தில் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் குடும்பம் என்னும் கருப்பொருளின்கீழ்க் குடும்ப உறவுகளிடையே நிகழும் பல பிரச்சனைகள் அல்லது நிகழ்வுகள் பேசப்பட்டாலும் அவை அனைத்தும் பெற்றோர் பிள்ளைகள் உறவு, கணவன் மனைவி, சகோதரத்துவ உறவு, புகுந்த வீட்டு உறவுகள் ஆகிய நான்கு பிரிவுகளின் கீழே அடங்குகின்றன.

2000 – 2009 ஆம் ஆண்டுவரை குடும்பம் என்னும் கருப்பொருளில் மலேசியாவில் 122 எழுத்தாளர்கள் 369 சிறுகதைகளைப் படைத்துள்ளனர். அவர்களில் 56 பெண் எழுத்தாளர்கள் மற்றும் 66 ஆண் எழுத்தாளர்கள் ஆவர். இக்காலக்கட்டத்தில் மலேசியாவில் குடும்பம் என்னும் கருப்பொருளில் பெண் எழுத்தாளர்களான ந.மகேஸ்வரி 19 கதைகளும், கமலாட்சி ஆறுமுகம் 18 கதைகளும் எழுதியுள்ளனர். ஆண் எழுத்தாளர்களில் ஆர்.சண்முகம் 15 கதைகளும், நா.ஆ.செங்குட்டுவன், கோ.புண்ணியவான், முருகையா முத்துவீரன் ஆகிய மூவரும் தனித்தனியே 11 கதைகளும் எழுதி உள்ளதைக் காணலாம். பிற எழுத்தாளார்கள் குறைந்த அளவில் குடும்பம் என்னும் கருப்பொருளில் எழுதியுள்ளனர்.

மலேசியாவைப் பொறுத்தமட்டில் ந.மகேஸ்வரி என்னும் எழுத்தாளர் குடும்பப் பின்னணியில் அமையும் கதைகளை அதிகம் எழுதும் சிறப்புக்குரியவராவார். அவருக்கு 2011- ஆம் ஆண்டு கரிகாலன் விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் குடும்பம் என்னும் கருப்பொருளில் 65 எழுத்தாளர்கள் 219 சிறுகதைகளைப் படைத்துள்ளனர். இவர்களில் ஆண் எழுத்தாளர்கள் 18 மற்றும் பெண் எழுத்தாளர்கள் 47 பேர் ஆவர். பெண் எழுத்தாளர்களான ஜெயந்தி சங்கர் 38 கதைகளையும், சீதாலட்சுமி 10 கதைகளையும், பீரம்மாள் 9

கதைகளையும் படைத்துள்ளனர். ஆண் எழுத்தாளர்களில் மா.இளங்கண்ணன் 27 கதைகளையும் சிங்கை தமிழ்ச்செல்வம் 23 கதைகளையும் , இரா.துரைமாணிக்கம் 21 கதைகளையும் எழுதியுள்ளனர். பிற எழுத்தாளர்கள் குறைந்த அளவில் குடும்பம் என்னும் கருப்பொருளில் சிறுகதை எழுதியிருப்பதைக் காணலாம். சிங்கப்பூரைப் பொறுத்தமட்டில் குடும்பம் என்னும் கருப்பொருளில் ஜெயந்தி சங்கர் அதிகமான கதைகளை எழுதியிருப்பதைக் காண முடிக்கின்றது. 2013 - ஆம் ஆண்டு ஜெயந்தி சங்கரின் 'திரிந்தலையும் திணைகள்' என்னும் நாவலுக்குக் கரிகாலன் விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. மலேசியாவில் ந.மகேஸ்வரி, சிங்கப்பூரில் ஜெயந்தி சங்கர் இருவரும் பெண் எழுத்தாளர்கள். குடும்பம் என்னும் கோபுரத்தை வடிவமைக்கும் சிற்பிகளாக இல்லறத் தலைவிகள் செயல்படுவதாலே, இருநாட்டிலும் பெண் எழுத்தாளர்களே குடும்பம் என்னும் கருப்பொருளில் அதிகக் கதைகள் எழுதியிருப்பதைக் காண முடிகின்றது.

***ஆ. சமூகம்***

***மலேசியச் சிறுகதைகளில் சமூகம்***

மலேசியாவில் சமூகம் என்னும் கருப்பொருளின்கீழ்ப் பல சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன சமூகத்தில் நிலவும் சீர்கேடுகள், மூடநடம்பிக்கைகள், சாதியம், அரசியல், அவலங்கள் தோட்டத்துச் சிக்கல்கள் முதலிய கூறுகளே பரவலாகப் பேசப்படுகின்றன.

***சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் சமூகம்***

சிங்கப்பூரில் சமூகம் என்னும் கருப்பொருள் சமூகத்தில் நிலவும் சீர்கேடுகள், மூடநம்பிக்கைகள், குடிப்பழக்கம் முதலிய கருத்துகளை உள்ளடக்கியது.

சமூகம் என்னும் கருப்பொருளில் 93 மலேசிய எழுத்தாளர்கள் 321 கதைகளும் , 29 சிங்கப்பூர் எழுத்தாளர்கள் 121 கதைகளும் எழுதியுள்ளனர். இந்த பத்து ஆண்டு காலத்தில் சமூகம் என்னும் இக்கருப்பொருள் பிரிவில் மலேசியப் பெண் எழுத்தாளர்களான நிர்மலா பெருமாள் 13 கதைகளும், ருக்குமணி லோகா எட்டு கதைகளும், நிர்மலா ராகவன் ஐந்து கதைகளும் எழுதியுள்ளனர். ஆண் எழுத்தாளர்களில் ஆர்.சண்முகம் 22 கதைகளையும், நா.ஆ. செங்குட்டுவன் 14 கதைகளையும் , சாமிமூர்த்தி 12 கதைகளையும் எழுதியுள்ளனர். மலேசியாவில் ஆண் பெண் எழுத்தாளர்களில், பெண் எழுத்தாளர்களைக் காட்டிலும் ஆண் எழுத்தாளர்களே அதிக அளவில் சமூகச் சிந்தனை உடைய கதைகளைப் படைத்துள்ளனர்.

சிங்கப்பூரில் பெண் எழுத்தாளரான ஜெயந்தி சங்கர் 18 கதைகள் சமூகம் என்னும் இப்பிரிவின்கீழ் எழுதியுள்ளார். அவரை அடுத்துப் பீரம்மாள் ஐந்து கதைகளையும், லதா மூன்று கதைகளையும் எழுதியுள்ளனர். ஆண் எழுத்தாளர்களில் சிங்கை மா.இளங்கண்ணன் 30 கதைகளையும், இந்திரஜித் 10

கதைகளையும், ஜே.எம்.சாலி ஒன்பது கதைகளையும் எழுதியுள்ளனர். சிங்கையில் ஆண் பெண் எழுத்தாளர்களை ஒப்பு நோக்கையில் சிங்கை மா.இளங்கண்ணன் அதிக அளவில் சமூகம் என்னும் கருப்பொருளைக் கையாண்டுள்ளார்.

### இ. தனிமனிதப் போராட்டங்கள்

### மலேசிய சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் தனிமனிதப் போரட்டங்கள்

மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் மூன்றாவது இடத்தில் தனிமனிதப் போராட்டங்கள் என்னும் கருப்பொருள் சிறுகதைகளில் பேசப்படுகின்றன.தனிமனிதப் போராட்டங்கள் என்னும் இக்கருப்பொருள் பிரிவு, ஒரு தனிமனிதன் தன் வாழ்வில் எதிர்நோக்கும் அனைத்துச் சிக்கல்களையும் பேசுகின்றது.

இந்தப் பத்து ஆண்டு காலத்தில் மலேசியாவில் 191 சிறுகதைகளும் சிங்கப்பூரில் 80 சிறுகதைகளும் படைக்கப்பட்டுள்ளன. தனிமனிதப் போராட்டம் என்னும் இக்கருப்பொருளின்கீழ் மலேசியாவில் 72 எழுத்தாளர்களும், சிங்கப்பூரில் 21 எழுத்தாளர்களும் கதைகளைப் படைத்துள்ளனர். இவர்களில் மலேசிய எழுத்தாளர்களில் 50 ஆண், 22 பெண் எழுத்தாளர்கள் அடங்குவர். சிங்கப்பூர் எழுத்தாளர்களில் 12 ஆண் எழுத்தாளர்களும், ஒன்பது பெண் எழுத்தாளர்களும் இருக்கின்றனர்.

மலேசிய ஆண் எழுத்தாளர்களில் அதிக எண்ணிக்கையில் நா.ஆ.செங்குட்டுவன் 15 கதைகளையும், மு.அன்புச்செல்வன் 13 கதைகளையும், சாமிமூர்த்தி ஏழு கதைகளையும் படைத்துள்ளனர். பெண் எழுத்தாளர்களில் சாரதா கண்ணன், நிர்மலா ராகவன், தனித்தனியே ஆறு கதைகளையும், ஆதிலட்சுமி நான்கு கதைகளையும், நிர்மலா பெருமாள், ஹமிதா அப்துல் காதர் தனித்தனியே மூன்று கதைகளையும் படைத்துள்ளனர்.

சிங்கப்பூர் பெண் எழுத்தாளர்களில் ஜெயந்தி சங்கர் ஒன்பது கதைகளையும், லதா நான்கு கதைகளையும், சீதாலட்சுமி மூன்று கதைகளையும் ஏனைய ஆறு எழுத்தாளர்கள் தனித்தனியே ஒரு கதையையும் படைத்துள்ளனர். ஆண் எழுத்தாளர்களில் இந்திரஜித் 17 கதைகளையும், சிங்கை தமிழ்ச்செல்வம் பத்து கதைகளையும், ஜே.எம்.சாலி ஒன்பது கதைகளையும் படைத்துள்ளனர்.

**ஈ. மனித நேயம்**

***மலேசிய சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் மனிதநேயம்***

*மலேசிய சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்கள் அதிகமாகவே மனிதநேயத்தைக் கருப்பொருளாகக் கொண்டு சிறுகதைகளைப் படைத்துள்ளனர். மனிதநேயம் என்பது சாதி, மதம், நாடு, மொழி ஆகிய எல்லைகளைத் தாண்டி மனிதனை மனிதன் என மதித்து அவனிடம் அன்பு காட்டுதல் ஆகும். "உடன் உறை மக்கட்கு உற்றுழி உதவுதல், ஏழைகட்கு இரங்குதல், பசிப்பிணி நீக்கி வறுமைப் பிடியிலிருந்து மக்களைக் காத்து அரவணைத்தல் எனப் பல முகங்கள் கொண்டது'.'* (தேனப்பன், 1998, p.54). *இவர் கூறிய மனித நேயக் கருத்தை மலேசிய சிங்கப்பூர் எழுத்தாளர்கள் சிறுகதைகளாகப் படைத்துள்ளனர்.*

*மலேசிய எழுத்தாளர்களால் நான்காவது நிலையிலும், சிங்கப்பூர் எழுத்தாளர்களால் ஐந்தாவது நிலையிலும் கையாளப்பட்ட கருப்பொருள் மனிதநேயம் ஆகும். இப்பிரிவின்கீழ் மலேசியாவில்* 113 *கதைகளும், சிங்கப்பூரில்* 26 *கதைகளும் படைக்கப்பட்டுள்ளன. மலேசியாவின் மொத்த* 145 *ஆண் எழுத்தாளர்களில்,* 36 *எழுத்தாளர்களும்,* 103 *பெண் எழுத்தாளர்களில்* 14 *எழுத்தாளர்களும் இக்கருப்பொருளின்கீழ் கதைகள் எழுதியுள்ளனர்.*

*சிங்கப்பூரின் மொத்த* 28 *ஆண் எழுத்தாளர்களில், ஒன்பது எழுத்தாளர்களும்,* 82 *பெண் எழுத்தாளர்களில் நான்கு எழுத்தாளர்களும்* 14 *பிரிவுகளில் கதைகளை எழுதியுள்ளனர். இக்காலக்கட்டத்தில் மலேசியாவில் மனிதநேயம் என்னும் இப்பிரிவின்கீழ்ப் பெண் எழுத்தாளர்களான கமலாட்சி ஆறுமுகம் மூன்று கதைகளும், ருக்குமணி லோகா இரண்டு கதைகளும், ஏனைய* 12 *எழுத்தாளர்களும் தனித்தனியே ஒரு கதையையும் எழுதியுள்ளனர். சிங்கப்பூர்ப் பெண் எழுத்தாளர்களான ஜெயந்தி சங்கர் ஆறு கதைகளும், சீதாலட்சுமி, க.அமுதா, மு.நளாயனி நாயர் தனித்தனியே ஒரு கதையையும் எழுதியுள்ளனர்.*

*மலேசியாவில் ஆண் எழுத்தாளர்களான க.கிருஷ்ணசாமி ஒன்பது கதைகளும், ஆர்.சண்முகம், ந.வரதராசன் தனித்தனியே ஒன்பது கதைகளும், நா.ஆ செங்குட்டுவன், இளமணி ஏழு கதைகளையும் எழுதியுள்ளனர். மலேசியாவில் பெரும்பாலான ஆண் எழுத்தாளர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட கதைகளையே இப்பிரிவின்கீழ் எழுதி உள்ளனர். சிங்கப்பூரில் ஆண் எழுத்தாளர்களான சிங்கை மா.இளங்கண்ணன், தமிழ்ச்செல்வம் தனித்தனியே நான்கு கதைகளும், ஜே.எம்.சாலி, மு.தங்கராசன் தனித்தனியே இரண்டு கதைகளும் ஏனைய ஐந்து ஆண் எழுத்தாளர்கள் தனித்தனியே ஒரு கதையையும் எழுதியுள்ளனர். இருநாட்டு எழுத்தாளர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் சிங்கப்பூர் எழுத்தாளர்களைக் காட்டிலும் , மலேசிய எழுத்தாளர்கள் குறிப்பாக ஆண் எழுத்தாளர்கள் அதிக அளவில் எழுதியுள்ளனர்.*

**உ. பெண்ணியம்**

**மலேசிய சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் பெண்ணியம்**

மலேசிய சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் கருப்பொருள்கள் அடிப்படையில் மலேசியாவில் ஐந்தாவது இடத்தையும் சிங்கப்பூரில் ஆறாவது இடத்தையும் பெற்றிருப்பது 'பெண்ணியம்' என்னும் கருப்பொருள் ஆகும்.

மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் பெண்ணியம் என்னும் கருப்பொருளின்கீழ்ப் புதுமைப் பெண், போகப் பொருளாகக் காணப்படும் பெண்கள், பெண்ணடிமை மற்றும் வரதட்சணை முதலிய கருத்துகளை மையமாகக் கொண்டு சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன.

இப்பத்தாண்டு காலத்தில் மலேசியாவில் 83 கதைகளும், சிங்கப்பூரில் 25 கதைகளும் பெண்ணியம் என்னும் கருப்பொருளின்கீழ் வெளியீடு கண்டுள்ளன. மலேசியாவில் பெண்ணியம் என்னும் கருப்பொருளில் 33 ஆண் எழுத்தாளர்களும், 19 பெண் எழுத்தாளர்களும் எழுதியுள்ளனர். 33 ஆண் எழுத்தாளர்களில் நா.ஆ. செங்குட்டுவன் ஐந்து கதைகளும், நிலாவண்ணன், ந.வரதராசன், ஆர்.சண்முகம் தனித்தனியே நான்கு கதைகளும் எழுதியுள்ளனர். 19 பெண் எழுத்தாளர்களில் எஸ் பி. பாமா, கமலாட்சி ஆறுமுகம் தனித்தனியே மூன்று கதைகளும், நிர்மலா பெருமாள் இரண்டு கதைகளும், ஏனைய எழுத்தாளர்கள் ஒரு கதையையும் எழுதியுள்ளனர்.

சிங்கப்பூரில் இக்காலக்கட்டத்தில் பெண்ணியம் என்னும் இக்கருப்பொருளின்கீழ் ஆறு ஆண் எழுத்தாளர்களும், எட்டு பெண் எழுத்தாளர்களும் 18 பிரிவின் அடிப்படையில் கதைகளை எழுதியுள்ளனர். ஆண் எழுத்தாளர்களில் சுப்ரா மூன்று கதைகளும், மு.தங்கராசன், எம்.கே.குமார், சிங்கை தமிழ்ச்செல்வம் தனித்தனியே இரண்டு கதைகளும், ஜே.எம்.சாலி, சபா.இராஜேந்திரன் ஒரு கதையையும் எழுதியுள்ளனர். பெண் எழுத்தாளர்களில் ஜெயந்தி சங்கர் ஏழு கதைகளையும் ஏனைய எழுத்தாளர்கள் ஒரு கதையையும் எழுதியுள்ளனர்.

**ஊ. காதல்**

**மலேசிய சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் காதல்**

காதல் கலைப்படைப்பின் பாடுபொருளாக எல்லாக் காலத்திலும் நின்று நிலவுகிறது. கிரேக்கப் பெருங்காவியங்கள் முதல் இந்தியப் பெருங்காவியங்கள் காதல் வரை பொதுவான முதன்மைக் கருப்பொருளாகும். தமிழில் சங்கக்காலம் தொடங்கி இன்றுவரை காதல் என்பது கருப்பொருளாகப் பேசப்பட்டு வருவதைக் காணலாம்.

இளவயத்தில் காதல் ஏற்படுவது இயல்பு. இன்றைய இளைஞர்கள் பலர் காதல் வலையில் சிக்கி, வீட்டை விட்டு ஓடுதல், போதைப் பொருளுக்கு அடிமையாகுதல் , பிறகு வன்முறையில் ஈடுபடுதல் எனப் பல்வேறு எதிர்மறைச் செயல்களில் ஈடுபடுவதை மலேசிய , சிங்கப்பூர் எழுத்தாளர்கள் தங்கள் சிறுகதைகளில் கருப்பொருளாகக் கொண்டு படைப்புகளைப் படைத்திருக்கின்றனர்.

இந்தப் பத்து ஆண்டு காலத்தில் கருப்பொருள் அடைப்படையில் மலேசியாவில் ஆறாவது இடத்தையும், சிங்கப்பூரில் நான்காம் நிலையையும் பிடித்திருப்பது ‘காதல்’ என்னும் கருப்பொருள் ஆகும். மலேசியாவில் 69 சிறுகதைகளும், சிங்கப்பூரில் 43 சிறுகதைகளும் இப்பிரிவின் கீழ்ப் படைக்கப்பட்டுள்ளன.

காதல் என்னும் இக்கருப்பொருளை மலேசியாவில் 11 பெண் எழுத்தாளர்களும், 25 ஆண் எழுத்தாளர்களும், சிங்கப்பூரில் பத்துப் பெண் எழுத்தாளர்களும் , ஒன்பது ஆண் எழுத்தாளர்களும் தங்கள் படைப்புகளில் கையாண்டுள்ளனர். மலேசியப் பெண் எழுத்தாளர்களில் நிர்மலா பெருமாள் மூன்று கதைகளும், ந.மகேஸ்வரி , சாரதா கண்ணன், புலவர் கோமகள் தனித்தனியே இரண்டு கதைகளும் ஏனைய எழுத்தாளர்கள் ஒரு கதையையும் எழுதியுள்ளனர். ஆண் எழுத்தாளர்களில் க.கிருஷ்ணசாமி ஏழு கதைகளும், இளமணி, நா.ஆ.செங்குட்டுவன், ஆர். சண்முகம் தனித்தனியே ஐந்து கதைகளும், பெ.மு.இளம்வழுதி, எம்.சேகர், ந.முனுசாமி தனித்தனியே நான்கு கதைகளும் எழுதியுள்ளனர்.

சிங்கப்பூர்ப் பெண் எழுத்தாளர்களில் ஜெயந்தி சங்கர் இரண்டு கதைகளும், ஏனைய ஒன்பது எழுத்தாளர்கள் தனித்தனியே ஒரு கதையையும் படைத்துள்ளனர். சிங்கப்பூர் ஆண் எழுத்தாளர்களில் சிங்கை மா.இளங்கண்ணன் 12 கதைகளும், ஜே.எம்.சாலி, இந்திரஜித், இரா.துரைமாணிக்கம் தனித்தனியே நான்கு கதைகளும், சிங்கை தமிழ்ச் செல்வம் இரண்டு கதைகளும், ஏனைய எழுத்தாளர்கள் ஒரு கதையையும் எழுதியுள்ளனர்.

**எ. கல்வி**

**மலேசிய சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் கல்வி**

மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் கருப்பொருள் அடிப்படையில் கடைசி இடத்தைப் பெற்றிருப்பது “கல்வி” என்னும் கருப்பொருளாகும். கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கண்கள் போன்றவை என்ற வள்ளுவரின் கூற்று இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும். கல்வி கற்காத சமூகம் உயர்ந்ததாகச் சரித்திரம் இல்லை. கல்வி கற்காததால் ஒரு மனிதன் எதிர்நோக்கும் சவால்கள், கல்வி கற்பதில் பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள், பிள்ளைகளைப் படிக்க வைப்பதில் பெற்றோர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் எனப் பலதரப்பட்ட பிரிவுகள் மலேசிய சிங்கப்பூர் சிறுகதைகளில் பேசப்படுகின்றன.

*மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் 2000-2009 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சிறுகதைகளில் காணப்படும் கருப்பொருள்கள்: ஒரு பார்வை*

இக்காலக்கட்டத்தில் மலேசியாவில் 49 சிறுகதைகளும், சிங்கப்பூரில் ஏழு கதைகளும் மட்டுமே வெளியீடு கண்டுள்ளன. மலேசியப் பெண் எழுத்தாளர்களில் மொத்தம் 12 பேர் இக்கருப்பொருள் பிரிவின்கீழ் எழுதியுள்ளனர். இவர்களில் ந.மகேஸ்வரி மட்டும் இரண்டு கதைகளை எழுதியுள்ளார். ஏனைய பத்து எழுத்தாளர்களும் தனித்தனியே ஒரு கதையை எழுதியுள்ளனர். ஆண் எழுத்தாளர்கள் 28 பேர்கள் இக்கருப்பொருளின்கீழ் எழுதியுள்ளனர். இவர்களில் கோ.புண்ணியவான் நான்கு கதைகளும், நிலாவண்ணன், செ.கோபாலன், சி.வடிவேலு, அ.பழனியாண்டி, இளம்பூரணன் ஆகியோர் தனித்தனியே இரண்டு கதைகளும், மீதமுள்ள 22 எழுத்தாளர்கள் ஒரு கதையையும் எழுதியுள்ளனர்.

சிங்கப்பூரில் கல்வி என்னும் கருப்பொருளில் ஏழு கதைகள் மட்டுமே படைக்கப்பட்டுள்ளன. பெண் எழுத்தாளர்களில் ஜெயந்தி சங்கர், பீரம்மாள் பீர் முகம்மது, இரத்தின மாலா, திருமதி சியாமளா இராவ் ஆகிய நால்வரும் தனித்தனியே கதைகளைப் படைத்துள்ளனர். அவை “நாலே கால் டாலர்” , “தன்மானம்”, “சந்தியா கால ஆசை” மற்றும் “தாகம்” ஆகும். ஆண் எழுத்தாளர்களில் மா.இளங்கண்ணன், தமிழ்ச்செல்வம் மற்றும் சுப்ரா தனித்தனியே ஒரு கதையைப் படைத்துள்ளனர். அவை ”பரிதியைக் கண்ட பனி” , “மூச்சுக்காற்றாய்” , “பசுமரத்தாணி” ஆகியவையாகும்.

**ஏ. பிற கருப்பொருள்கள்**

***மலேசிய சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் பிற கருப்பொருள்கள்***

இக்கட்டுரையில் மலேசியாவில் பிற என்னும் கருப்பொருளின்கீழ் சமயம், ஆன்மீகம், தன்முனைப்பு, உரிமைக்குரல், முதலாளித்துவம், இலக்கியம், நாட்டுப்பற்று, இயற்கை, அறிவியல், சுற்றுச்சூழல், வரலாறு, தத்துவம், நட்பு, பிராணி வளர்ப்பு, மரண உணர்வு, விளையாட்டு, அதிஷ்ட்டம், மாய உலகம், வர்ணனைக்கதைகள், மனித பழக்க வழக்கங்கள் ஆகிய பிரிவுகளின்கீழ்ச் சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூரில் பிற என்னும் கருப்பொருளில் அறிவியல், தன்முனைப்பு, நட்பு, நாட்டுப்பற்று, சமயம், வாழ்க்கைச் சித்திரிப்பு ஆகிய பிரிவுகளின் கீழ்ச் சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன.

2000 - 2009 வரை மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் கருப்பொருள் அடிப்படையில் ஏழாவது இடத்தைப் பிடித்திருப்பது “பிற” என்னும் கருப்பொருள் ஆகும். இப்பிரிவின் கீழ் மலேசியாவில் 43 எழுத்தாளர்களால் 64 சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன. இவர்களுள் 25 ஆண் எழுத்தாளர்களும் ஒன்பது பெண் எழுத்தாளர்களும் அடங்குவர். சிங்கப்பூரில் இப்பிரிவின்கீழ் ஐந்து எழுத்தாளர்களால் 13 சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன. அவர்களுள் நான்கு ஆண் எழுத்தாளர்களும் ஒரு பெண் எழுத்தாளரும் அடங்குவர்.

பிற என்னும் கருப்பொருளில் மலேசியாவில் ஆண் எழுத்தாளர்களில் ஆ.நாகப்பன் ஆறு கதைகளையும், ப.சந்திரகாந்தம் ஐந்து கதைகளையும், ரெ.கார்த்திகேசு நான்கு கதைகளையும் எழுதியுள்ளனர். ஒன்பது பெண் எழுத்தாளர்கள் ஒவ்வொரு கதையை மட்டுமே எழுதியுள்ளனர்.

சிங்கப்பூர் எழுத்தாளர்களில் சிங்கை மா.இளங்கண்ணன் ஏழு கதைகளையும், சிங்கை தமிழ்ச்செல்வம் மூன்று கதைகளையும், ஜே.எம்.சாலி, எம்.கே.குமார் ஒவ்வொரு கதையையும் எழுதியுள்ளனர். பெண் எழுத்தாளர்களில் லதா மட்டுமே ஒரு கதையை எழுதியுள்ளார்.

**முடிவுரை**

2000 - 2009 - இல் வெளியாகியுள்ள சிறுகதைகள் அக்காலச் சமுதாயத்தைக் குறைந்த அளவே பிரதிபலிக்கக்கூடியனவாக அமைகின்றன. மலேசியா சிங்கப்பூர் ஆகிய இருநாடுகளிலும் இதே நிலையைக் காணமுடிகின்றது. 2000 முதல் 2009 கணினியுக காலம் என்பதால் பெரும்பாலான கதைகள் இன்றையச் சூழலை மையமாக வைத்தே படைக்கப்பட்டுள்ளன. மலேசிய எழுத்தாளர்களுக்குக் கதைகளைப் படைக்கத் தோட்டப்புறச்சூழல் ஒரு பின்னணியாக அமைவதுபோல் சிங்கப்பூர் எழுத்தாளர்களுக்குக் குறிப்பாகத் தமிழகத்திலிருந்து சிங்கை வந்தவர்களுக்குத் தமிழகத்தின் பாதிப்புகள் மிகுதியாகவே இருப்பதைக் காணமுடிகின்றது.

குடும்பம், சமூகம், மனிதநேயம், பெண்ணியம், காதல், கல்வி, தனிமனிதப் போராட்டங்கள், பிற கருப்பொருள்கள் என எட்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆராய்ந்த நிலையில் குடும்பம் என்னும் கருப்பொருளில் இருநாட்டு எழுத்தாளர்களும் அதிகப் படைப்புகளைப் படைத்துள்ளனர். குடும்ப உறவில் முக்கியத்துவத்தை அறிந்திருந்ததால் இருநாட்டு எழுத்தாளர்களின் படைப்பிலும் ஒரு தரத்தைப் பார்க்க முடிகிறது.

சிங்கப்பூரில் கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதால் பணிப்பெண் தேவை அவசியமாகிறது. மலேசியாவில் கூட்டுக்குடும்பம் அதிகம் என்பதால் பணிப்பெண் தேவை அவ்வளவாக இல்லை என்பதைக் காணமுடிகிறது. சமூகம் என்னும் பிரிவில் இதற்குக் காரணம் மலேசியாவில் அதிக தோட்டப்புறங்கள் இருப்பதனால், மக்கள் பொழுதுபோக்குக்கு மது அருந்தி அதற்கு அடிமையாகிவிடுகின்றனர். இதனால், இவர்கள் வாழ்க்கை சீரழிகின்றது. இதனை நன்கு உணர்ந்த மலேசியச் சிறுகதை ஆசிரியர்கள் குடியைக் கருப்பொருளாகக் கொண்டு கதைகளைப் படைக்கின்றனர். இந்நிலை சிங்கப்பூரில் மாறுபடுகின்றது. சிங்கப்பூரில் குடிப்பழக்கத்தினால் ஏற்படும் விளைவுகள் பற்றிக் குறைவாகவே பேசப்பட்டுள்ளது.

2000 - 2009 வரை அறிவியல், வரலாறு, நாட்டுப்பற்று, இறையுணர்வு ஆகிய கருப்பொருள்களில் இருநாட்டு எழுத்தாளர்களும் குறைந்த எண்ணிக்கையிலேயே சிறுகதைகளைப் படைத்துள்ளனர். இக்கருப்பொருள்களில் எழுத்தாளர்கள் அதிகக் கவனம் செலுத்தி இருந்தால், வருங்காலச் சந்ததியினருக்குப் பயனுள்ளதாக அமைந்திருக்கும். ஏனெனில், இனிவரும் காலங்களில் அறிவியலின் ஆதிக்கம் அதிகம்

இருக்கும் அறிவியல்சார்ந்த படைப்புகள் வருமாயின் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க முடியும். மேலும், இருநாடுகளிலும் இறையுணர்வுக் கருப்பொருள் கொண்ட கதைகள் அதிகம் படைக்க சிறுகதை ஆசிரியர்கள் முன்வர வேண்டும். குறிப்பாக, மலேசியாவில் இளைஞர்களிடையே வன்முறை பிரச்சனை தலைவிரித்தாடுகிறது. இறையுணர்வுகொண்ட கதைகள் வருமாயின் ஓரளவுக்கு இப்பிரச்சனைக்கு ஒரு தீர்வாக அமையலாம்.

அரசியல் நிலையில் இருநாடுகளுக்கும் வெவ்வேறு அரசியலமைப்புச்சட்டம் இருந்தபோதிலும் அரசியல்சார்ந்த கதைகள் இருக்கவே செய்கின்றன. மலேசியாவில் தமிழ்ப்பள்ளி வளர்ச்சியில் அரசியல் தலைவர்களின் போக்கு பேசப்பட்டுள்ளது. பொதுநலமிக்க அரசியல் தலைவர், சுயநலமிக்க அரசியல் தலைவர்கள் என உண்மைத் தலைவர்களைச் சில கதைகள் அடையாளம் காட்டுகின்றன. சிங்கப்பூரில் அரசியல் சட்டத்திட்டம் உறுதியாக இருப்பதனால் சிங்கப்பூர் அரசியல் தொடர்பான கதைகள் படைக்கப்படவில்லை.

மலேசியாவில் கல்வி என்னும்பொழுது தமிழ்ப்பள்ளிப் பிரச்சனைகளைப் பின்னணியாகக் கொண்டு சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூர்க் கல்விநிலை உலகத் தரத்தில் இருப்பதனால் கல்விப் பிரச்சனைக் கொண்ட கதைகள் படைக்கப்படவில்லை. இப்பத்து ஆண்டு காலத்தில் சிங்கப்பூரில் படைக்கப்பட்ட ஏழு கதைகளும் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றியே பேசுகின்றன தவிர பிரச்சனையைப் பேசவில்லை.

2000 - 2009 உட்பட்ட காலத்தில் பொதுவாகவே குடும்பம், மனிதநேயம், சமூகம் ஆகிய மூன்று கருப்பொருள்களில் மலேசிய எழுத்தாளர்களான ந. மகேஸ்வரி, கோ.புண்ணியவான், சை.பீர்முகம்மது, ரெ.கார்த்திகேசு, மு.அன்புச்செல்வன், வ.முனியன் ஆகியோர் சிறப்பாகக் கதைகளைப் படைத்துள்ளனர். சிங்கையில் மா. இளங்கண்ணன், ஜெயந்தி சங்கர் , தமிழ்ச்செல்வம், ஜே.எம். சாலி ஆகியோரையும் இங்குக் குறிப்பிடலாம்.

சுருங்கக் கூறின், மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் அறிவியல், தொழில்நுட்பம், வரலாறு ஆகிய கருப்பொருள்களில் சிறுகதைகள் குறைந்து காணப்படுகின்றன. இக்காலக்கட்டத்தில் அறிவியலின் தேவை அதிகமாய் இருப்பதாலும் நமது வரலாறுகள் மறைந்து போவதாலும் மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்கள் அறிவியல், தொழில்நுட்பம், வரலாறு ஆகிய கருப்பொருள்களில் அதிகப் படைப்புகளைப் படைக்க முன் வர வேண்டும். அப்போதுதான் இளைய தலைமுறை வருங்காலத்தில் அறிவியலையும் வரலாற்றையும் மறக்காத சூழல்நிலை இருக்கும்.

## References

Govindasamy, Na. (1992), *Singapore Tamil Cirukathaigal*, Tamil Puthtakalayam.Chennai.

Kaartikesu,C.(1967),*Tamilil Cirukataiyin Toatramum Valarchiyum*, Paari Nilayam. Chennai.

Kannabiran, Rama. (1977), *Singapuril Tamil Cirukathai*, Singapore Palkalaikalaga Tamil Peravai. Singapore.

Sababathy,Ve.(1995),*Viduthalaikku Pinthiya Malaysia Tamil Novelkal*, Uma Pathippagam. Kuala Lumpur.

Sivakumaaran,ARA.(2001), *Singapore Marabu Kavithaigal OOru Thiranaaivu*, Bharathi Puthtakalayam,Chennai.

Thirunaavukarasu,Me(1977),*Singapooril Tamil Cirukataigal*, Tamil Peravai, Singapore.

Nyanamoorthy.T.A(1998), *Ilakkiya Thiranaaiviyau* , Ainthirai Pathippagam. Chennai.

Velusamy.C.(1999), *Thiranaaivu Cintanaikal*, Ainthinai Pathippagam, Chennai.